2020 பிப்ரவரி 19]

மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேறியிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்ட மக்கள் மட்டுமல்ல; 11 மாவட்ட மக்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியோடு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

ஆவின் பாலகம்

***34917—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் கலைக் கல்லூரி வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற சாமானியர்கள் எல்லாம், சரித்திரம் மிகுந்த இந்தச் சட்டசபையில் பேசுவதற்குரிய வாய்ப்பை, அமைச்சராகக்கூடிய வாய்ப்பை வழங்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே நல்லாட்சி நடத்தி, பொற்கால தமிழகத்தை உருவாக்கி வருகின்ற அருமை அண்ணன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்குத் துணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி. எஸ். அவர்களையும் வணங்கி, கேள்விக்கான எனது பதிலை அளிக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் எல்லைக்குட்பட்ட திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள திருப்பத்தூர் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க கல்லூரி நிருவாகத்திடமிருந்து அனுமதி கடிதம் பெறப்பட்ட காரணத்தினால், திருப்பத்தூர் அரசு கலைக் கல்லூரியில் ஆவின் பாலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். திருப்பத்தூர் அரசு கலைக் கல்லூரியில் 1,800 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். அந்தக் கலைக் கல்லூரியில் 40-க்கும் மேற்பட்ட அலுவலகப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்தக் கல்லூரி வளாகத்தில் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய நவீன பாலகம் அமைக்க வேண்டுமென்ற துணைக் கேள்வியை சென்ற கூட்டத்தொடரின்போது, 17-7-2019 அன்று கேட்டதற்கு, 200 கல்லூரிகளில் பாலகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஓராண்டுக்கு முன்னர் பதில் அளித்துள்ளார்கள். எனவே, விரைவாக இந்தக் கல்லூரியில் ஆவின் பாலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்குட்பட்ட திருப்பத்தூர்

2020 பிப்ரவரி 19]

சட்டமன்றத் தொகுதியில் உள்ள அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் கேள்வி கேட்டார்; அதற்கு நான் பதில் அளித்தேன். ஆனால், கல்லூரி நிருவாகத்திடமிருந்து அனுமதி பெறுவதில் காலதாமதம் ஏற்பட்ட காரணத்தினால், இது சம்பந்தமாக அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் சகோதரர் மாண்புமிகு திரு. வீரமணி அவர்களிடத்தில் சொல்லி, அவரும் அவர்களிடத்தில் அது சம்பந்தமாகப் பேசியிருக்கின்றார். அந்தக் கல்லூரி நிருவாகத்திடம் பேசி, சென்ற மாதம் 21–1–2020 அன்று அனுமதி கடிதத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்ற காரணத்தினால், கூடிய விரைவில் அந்தக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆவின் பாலகம் அமைப்பதற்கு நடவடிக்கை உறுதியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய உறுப்பினர் அவர்கள், கல்லூரிகளில் 200 பாலகங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத் தொடரின்போது சொன்னார் என்ற கருத்தைச் சொன்னார். அது உண்மைதான். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி, அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சி, சொன்னதைச் செய்யக்கூடிய ஆட்சி என்பதற்கு அடையாளமாக, கல்லூரிகளில் 200 பாலகங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், 25 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களில் 183 பாலகங்களும், Federation–*சென்னை தலைமையிடத்தில், சென்னை மாநகரில் 23 பாலகங்களும், ஆக மொத்தம், கல்லூரிகளில் மட்டும் 206 பாலகங்கள் தற்போது அமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் அனுமதி கொடுக்கின்ற அரசுக் கல்லூரிகள், தனியார் கல்லூரிகளில் அரசு ஆவின் பாலகங்கள் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருப்பத்தூர் பகுதி கறவை மாடுகளை அதிகம் வளர்க்கும் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே பெருமளவு பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு உற்பத்தி*

செய்யப்படுகின்ற பெரும்பாலான பால், விவசாயிகளால் தனியார் கொள்முதல் நிலையங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதைத் தவிர்க்கும் பொருட்டு, அரசின்மூலம் பால் கொள்முதல் நிலையங்கள் உருவாக்கப்பட்டு, பால் குளிரூட்டும் நிலையம் திருப்பத்தூர் பகுதியில் துவக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா என்ற கேள்வியை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் கேட்டுள்ளார். திருப்பத்தூர் மாவட்டம் என்பது இப்போது புதியதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம். அது வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் அமைந்திருக்கின்றது. திருப்பத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், 69 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் 47 சங்கங்கள்தான் செயல்படும் சங்கங்களாக இருக்கின்றன. இவற்றில் 7,090 பால் ஊற்றும் உறுப்பினர்கள்மூலம், நாள் ஒன்றுக்கு 28 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. சங்கங்களின்மூலம் 1,200 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது. வேலூர் மாவட்ட ஒன்றியத்திற்கு 26,300 லிட்டர் பால் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. மாதம் ஒன்றிற்கு ரூபாய் 12 இலட்சம் அளவிற்கு முகவர்கள்மூலம் பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. திருப்பத்தூர் மாவட்டத்தில் ஒரு அதிநவீன பாலகம் மூலமும், 17 ஆவின் பாலகம் மூலமும், 42 ஆவின் உரிமை பெற்ற பால் முகவர்கள் மூலமும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. நம்முடைய உறுப்பினர் அவர்கள் அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்கின்றார். அந்த அளவிற்கு அங்கே பால் வரத்து வருகின்றபட்சத்தில் உறுதியாக அவர் சொல்கின்ற இடத்தில், திருப்பத்தூர் பகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அங்கு உற்பத்தி செய்யப்படும் பால் தனியாருக்கு போவதாகச் சொல்கின்றார்கள். பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள், தனியார் அமைப்புகளுக்கு பாலைக் கொடுப்பதைக் குறைத்து, ஆவின் நிறுவனத்திற்கு, ஆவின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாலைக்

2020 பிப்ரவரி 19]

கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். பாலுக்கான கொள்முதல் விலையை அரசு உயர்த்திக் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலும், சரியான நேரத்தில் பணப் பட்டுவாடா செய்யப்படுகின்ற காரணத்தினாலும், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விற்பனை செய்கின்றார்கள். ஆகவே, எவ்வளவு பால் அங்கே வருகின்றதோ, அதற்குத் தேவையான அளவிற்கு அங்கே பால் குளிரூட்டும் நிலையம் இருக்கிறது. ஆகவே, இன்னும் பால் அங்கே அதிகமாக வருகின்றபட்சத்தில், புதிதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

தொழிற்பேட்டை

***36624—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்வழியில் மகத்தான மக்கள் தொண்டில், முத்தான 3 ஆண்டுகளை நிறைவு செய்து, நான்காம் ஆண்டில் நல்லாட்சியைத் தொடங்கியுள்ள எங்கள் சாமானிய முதல்வர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்குத் துணையாக இருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் 100 விழுக்காடு ஏற்றுமதிக்கான

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS